RND-A5

10 AUG 1998
CHENNAI - 600 ...

தமிழ்நாடு அரசு

பணியாளர் மற்றும் நிர்வாகச்
சீர்திருத்தத் (ஆர்) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

கடித எண்.50852/ஆர்/97-3/நாள் : 5.8.98.

031726

அனுப்புநர்

திரு. தா. பிரகாஷ், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்

அனைத்துச் செயலாளர்கள், தலைமைச் செயலகத் துறை, சென்னை-9.
அனைத்துத் துறைத் தலைமை அலுவலர்கள்.
முதல்வர், மட்கலத் தொழில்நுட்ப நிறுவனம், விருத்தாசலம்.
செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2.
அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகள், சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
இயக்குநர், தொழில் மற்றும் வணிகத்துறை, கிண்டி, சென்னை-32.

ஐயா,

பொருள் : கல்வித் தகுதி – பொதுப்பணிகளில் நியமனம் செய்ய மட்கலத் தொழில்நுட்ப நிறுவனத்தில் வழங்கப்படும் தொழில்நுட்பப் பட்டயத்தை அங்கீகாரம் செய்து ஆணையிட்டது – விருத்தாசலத்திலுள்ள தொழில்நுட்ப நிறுவனம் என திருத்தம் வெளியிடக் குழுவின் பரிந்துரை– திருத்தம் வெளியிடப்படுகிறது.

பார்வை : 1. அரசு ஆணை நிலை எண்.119, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை, நாள் : 7.5.97. (pp. 61-62 c/.)

2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலரது கடித எண்.5129/ஆர்.என்.டி. ஏ.5/96, நாள் : 30.7.97. (pp. 67-68 c/.)

3. அரசுக் கடித எண்.50852/97-1, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை, நாள் : 17.9.97. (pp. 41-42 c/.)

4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலரது கடித எண்.5129/ஆர்.என்.டி. ஏ.5/96, நாள் : 13.5.98. (pp. 85-86 c/.)

---

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் மட்கலத் தொழில்நுட்ப நிறுவனத்தால் (Institute of Ceramic Technology) வழங்கப்படும் மட்கலத் தொழில்நுட்பப் பட்டயத்தைப் பொதுப் பணிகளில் வேலைவாய்ப்பிற்கு அரசு அங்கீகாரம் அளித்தது.

2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலர் தனது 30.7.97 நாளிட்ட கடிதத்தில், விருத்தாசலம் மட்கலத் தொழில்நுட்ப நிறுவனத்தில் வழங்கப்படும் மட்கலத் தொழில்நுட்பப்

பட்டயத்தைப் பொதுப் பணிகளில் வேலைவாய்ப்பிற்கு அங்கீகரிக்குமாறு கோரியிருந்தது எனவும், அரசாணையில் தவறாக [illegible] "விருத்தாசலம் மட்கலத் தொழில்நுட்ப நிறுவனம்" என்பதற்குப் பதிலாக "மட்கலத் தொழில்நுட்ப நிறுவனம்" எனக் குறிப்பிட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது எனவும், குழு தனது கூட்ட நடவடிக்கையில் குறிப்பிட்ட மட்கலத் தொழில்நுட்பப் பட்டயத்தைத் தொழில் ஆய்வாளர் அல்லது தொழில்துறை இளநிலை பொறியாளர் போன்ற பதவிகளுக்கேற்ப நிர்ணயிக்கலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், குழு பரிந்துரை தெரிவிக்கப்பட்ட தேர்வாணையக் கடிதத்தில் இது விடுபட்டுள்ளது எனவும், இது சம்பந்தமாக அரசு ஆணை பத்தி 3 மற்றும் 4-ல் தக்க திருத்தங்கள் வெளியிடுமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. இப்பொருள் குறித்து அரசு ஆணை நிலை எண்.441, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் : 20.12.93-ன் மூலம் அமைக்கப்பட்ட குழுவின் முன்னர் 23.4.98 அன்று நடந்த குழுக் கூட்டத்தில் வைக்கப்பட்டது. மட்கலத் தொழில்நுட்ப நிறுவனம் என்பதற்குப் பதிலாக "விருத்தாசலத்திலுள்ள மட்கலத் தொழில்நுட்ப நிறுவனம்" எனத் திருத்தம் வெளியிடுமாறு அரசிற்கு பரிந்துரைத்துள்ளது. குழுவின் பரிந்துரையை ஏற்று பார்வை ஒன்றில் காணும் அரசாணைக்குக் கீழ்க்கண்டவாறு திருத்தம் வெளியிடப்படுகிறது :-

<u>திருத்தம்</u>

மேற்குறிப்பிட்ட அரசாணையில் பத்தி 2, 3 மற்றும் 4-ல் "மட்கலத் தொழில்நுட்ப நிறுவனம்" என்று குறிப்பிடப்பட்டுள்ள பதிவுகளுக்குப் பதிலாக "விருத்தாசலம் மட்கலத் தொழில்நுட்ப நிறுவனம்" என்கிற பதிவுகள் மாற்றி அமைக்கப்படுகின்றன.

தங்கள் உண்மையுள்ள,

(கையொப்பம்)

அரசு செயலாளருக்காக.

நகல் :-

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அனைத்துப் பிரிவுகள்.